# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

[1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1997, ஜூலை மாதம் 25 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம்** பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : 11. 50 | தபாற் செலவு : ரூபா 4. 10

## 1997 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.- ஒ. 73/95

## குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

101 ஆம் அத்தியாயத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 55 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

> "(1) பிராது கோப்பிடப்பட்டு 49 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்படும் சுருக்கக் கூற்றுக்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மேல், நீதிமன்றம் அழைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்பட வேண்டிய நாளன்று அல்லது அதற்கு முன்னர் பிராதுக்கு மறுமொழி அணைக்குமாறு எதிராளியைத் தேவைப்படுத்துகின்றதும், நீதிமன்றப் பதிவாளரினால் ஒப்பிடப்பட்டதும் முதலாம் அட்டவணையிலுள்ள 16 ஆம் இலக்கப் படிவத்தில் அழைப்புக் கட்டளை விடுக்குமாறு கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய நாள், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் இருத்தல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59, 60, மற்றும் 61 ஆகிய பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59, 60, 61 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:—

"அழைப்புக் கட்டளை பதிவுத் தபால் மூலம் அனுப்பப் படுதல் வேண்டும்.

59. (1) அழைப்புக் கட்டளை சாதாரணமாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) (அ) கூட்டுத்தாபானம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில், அழைப்புக் கட்டளை, அத்தகைய கூட்டுத்தாபனத்தின், அல்லது குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எதுவும் இல்லா விடின் பிரதான தொழில் இடத்தில் ஒப்படைக் கப்படுதல் வேண்டும்.

(ஆ) எதிராளி உள்ளூரதிகார சபையொன்றின் பகிரங்க அலுவலர் ஒருவராக இருக்கின் றவிடத்து, நீதிமன்றம் அழைப்புக் கட்டளையை எதிராளி எத்திணைக்களத்தில் வேலை பார்க்கின்றாரோ, அத்திணைக்களத்தின் தலைவருக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப் பலாம், அத்துடன், அழைப்புக்கட்டளையை நேரடியாக எதிராளியிடம் சேர்ப்பிப்பது அத்தகைய திணைக்களத் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(இ) எதிராளி இன்னோர் ஆளினால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார் என நீதிமன்றம் முதற்றோற்ற அளவில் திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் அழைப் புக்கட்டளையை தொழில் தருநருக்கு அவரின் தொழில்புரி இடத்துக்கு அனுப்பலாம், அல்லது தொழில் தருநர் ஒரு கம்பனியாக அல்லது கூட்டுத்தாபனமாக இருக்கின்ற விடத்து, கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் செயலாளருக்கு, முகாமை யாளருக்கு அல்லது அது போன்ற வேறு அலுவலருக்கு அனுப்பலாம், அத்துடன் அழைப்புக் கட்டளையை எதிராளியிடம் நேரடியாக ஒப்படைப்பிப்பது, விடயத்திற்கேற்றவாறு அத்தகைய தொழில்தருநரின் அல்லது அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(3) எதிராளி தவிர்ந்த வேறோர் ஆளுக்கு அழைப்புக்கட்டளை பதிவுத் தபாலில் அனுப்பப்படும் ஒவ்வொரு விடயத்திலும், நீதிமன்றம் அத்தகைய அழைப்புக் கட்டளையின் இணைப் பிரதியொன்றையும் அனுப்புதல் வேண்டும். அத்துடன், அத்தகைய இணைப்பிரதியை விடயத்துக்கேற்றவாறு திணைக்களத் தலைவர், தொழில் தருநர் அல்லது அலுவலர், அழைப்புக்கட்டளையை எதிராளி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலுடன் அல்லது அது சேர்ப்பிக்கப்பட்டமை பற்றிய கூற்றொன்று அதன் மீது புறக்குறிப்பிட்டு சேர்ப்பிப்பைப் பயனுறுத்துகின்ற ஆளினால் ஒப்பமிடப்பட்டு, அவர் தாமாகவே சேர்ப்பிப்பைப் பயனுறுத்தாவிட்டால், நீதிமன்றத்தினால் எவ்வாளுக்கு அழைப்புக் கட்டளை அனுப்பி வைக்கப்பட்டதோ அவ்வாளினால் மேலொப்பமிடப்பட்டு உடனடியாக அத்தகைய இணைப்பிரதியை நீதிமன்றத் துக்குத் திருப்பி அனுப்பி வைத்தல் வேண்டும்.

(4) எதிராளி ஒருவர் மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையில் அவரிடம் அழைப்புக்கட்டளை ஒப்படைக்கப்பட்டதன் மேல், தானே நேரில் நீதிமன்றத்தில் தோன்றுகின்றவிடத்து, அவர், விடயத்துக்கு ஏற்றவாறு தமது தேசிய அடையாள அட்டையை அல்லது வலுவுடைய கடவுச் சீட்டொன்றைச் சமர்பித்தல் வேண்டும். அத்துடன், தம்முன் தோன்றிய ஆளும் அத்துடன் மேலே கூறப்பட்டவாறு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட ஆளும் ஒருவரே எனத் தம்மைத் திருப்திப்படுத்த வேண்டியது நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(5) எதிராளி ஒருவர், பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவம் செய்யப்படுமிடத்து, சட்டத்தரணி, எதிராளியின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலிப்பத்திரத்தில்

விடயத்துக்கேற்றவாறு எதிராளியின் தேசிய அடையாள அட்டையின் அல்லது கடவுச் சீட்டின் இலக்கத்தைக் கூறுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய எதிராளியின் ஆளடையாளத்தை இனங்காட்டும் புறக்குறிப்பொன்றையும் செய்தல் வேண்டும். கம்பனியொன்றின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் சார்பில் பதிலியொன்று சமர்பிக்கப்படுமிடத்து, அது, விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய கம்பனியின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையின் கீழ் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் —
"திணைக்களத் தலைவர்" — .

(அ) இலங்கை தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஏதாவது அலகின் உறுப்பினர் ஒருவரைக் குறிப்பீடு செய்து பயன்படுத்தப்படும்பொழுது, அவ்வலகின் ஆணையிடும் அலுவலர் எனப் பொருள் படும்;

(ஆ) உள்ளூரதிகார சபையொன்றில் வேலை செய்யும் ஆளொருவரைக் குறிப்பீடு செய்து பயன்படுத்தப்படும்பொழுது, உள்ளூரதிகாரசபை மாநகரசபையாக இருந்தால், அச்சபையின் மாநகரசபை ஆணையாளர் எனப் பொருள்படும். உள்ளூரதிகாரசபை நகரசபை ஒன்றாக அல்லது பிரதேச சபை ஒன்றாக இருந்தால் அச்சபையின் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் எனப் பொருள்படும் ;

(இ) வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைக் குறிப்பீடு செய்து பயன்படுத்தப்படும் போது, அத்தகைய ஆள் எவ்வரசாங்க திணைக்களத்தில் வேலை செய்கிறாரோ, அவ்வரசாங்க திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும் ; அத்துடன்

"தேசிய அடையாள அட்டை", என்பது, எவரேனும் ஆள் தொடர்பில் பயன்படுத் தப்படும்போது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்கள் பதிவு செய்யப்படும் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை எனப் பொருள்படும்.

நேரடி ஒப்படைப்பு

60. (1) பதிவுத் தபால் மூலம் அழைப்புக் கட்டளை ஒப்படைக்கப்பட முடியாதென அல்லது அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப் பட்ட பின்னரும் எதிராளி தோன்று வதற்கு தவறுகிறார் என அறிவிக்கப்படுமிடத்து, நீதிமன்றம் அத்தகைய கட்டளை பிசுக்கால் மூலம் எதிராளி யிடம் ஒப்படைப்பதன் மூலம் அல்லது சமர்ப் பிப்பதன் மூலம் நேரடியாகச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டுமென அல்லது எக்கிராம சேவை அலுவலர் பிரிவில் எதிராளி வதிகின்றாரோ, அக்கிராமசேவக அலுவலர் மூலம் எதிராளியிடம் ஒப்படைப்பதன் மூலம் அல்லது சமர்ப்பிப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும், அல்லது வழக்காளி, 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத் தெல்லைக்குள் கடன் வழங்கும் நிறுவன மொன்றாக இருக்கும் விடயத்தில், பிசுக்கால் மூலமாகவோ அல்லது முதலாம் அட்ட வணையின் 17 ஆம் இலக்கப் படிவத்தில் பணிப்பாணையொன்றுடன் சேர்த்து நீதி மன்றத் தினால் அதிகாரமளிக்கப்படும் வேறு அலுவலர் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கூட்டுத் தாபனம் ஒன்றின் விடயத்தில் அழைப்புக் கட்டளை நேரடியாகச் சேர்ப்பிப்பிக்கப்படுவதன் மூலம் அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிலிடத்துக்குப் பொறுப்பான செயலாளரிடம் அல்லது அதே போன்ற அலுவலரிடம் அல்லது பணிப்பாளர் ஒருவரிடம்

ஒப்படைப்பதன் மூலம் அல்லது சமர்ப்பிப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சேர்ப்பிப்பு போதிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்துப் பயனுறச் செய்யமுடியாமல் போனால், பிசுக்கால் அல்லது கிராம சேவை அலுவலர், எதிராளி சாதாரணமாக எவ்வீட்டில் வதிவாரோ, அவ்வீட்டின் துலாம்பரமான ஏதேனும் இடத்தில் அழைப்புக் கட்டளையை ஒட்டுதல் வேண்டும், அல்லது கூட்டுத்தாபனமொன்றின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அல்லது குழுவின் வழமையான தொழில் இடத்தில் ஒட்டுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் அழைப்புக்கட்டளை எதிராளியிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

சேர்ப்பித்தமை பற்றிய எண்பிப்பு

61. அழைப்புக் கட்டளையொன்று பதிவுத் தபால் மூலம் சேர்ப்பிக்கப்பட்டால் உள்நாட்டு அஞ்சல் விதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஒப்படைப்பு அறிவிப்பும், சேர்ப்பித்தமை பற்றிய புறக்குறிப்பு ஏதும் இருந்தால் அதுவும், அத்துடன் அழைப்புக் கட்டளையானது வேறேதேனும் முறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய சேர்ப்பிப்பு பற்றிய சத்தியக் கடதாசியும், அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தமை பற்றியும் அவ்வாறு சேர்ப்பித்த தேதி பற்றியும் போதுமான சான்றாதல் வேண்டுமென்பதுடன் அதனகத்து அடங்கியுள்ள கூற்றுக்கள் முரணானது எண்பிக்கப்பட்டால் அன்றியும் எண்பிக்கப்படும் வரையும் சரியானவையாகக் கருதப்படலும் வேண்டும்.",

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவானது "திகதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "எதிராளி முன்னர் பிராதுக்கு விடையளிக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட திகதியொன்றிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாததான ஒரு திகதியாகவிருக்கும் திகதி ஒன்றை நிர்ணயித்தல் வேண்டும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"நீதிமன்றம் செலவுத் தொகைகளை கொடுப்பதற்கு அல்லது ஒதுக்கி வைப்பதற்கு எப்போதும் தத்துவம் உடையதாக இருத்தல்.

209. கிரம முறையானதாயினுஞ்சரி சுருக்க முறையானதாயினுஞ்சரி, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது வழக்கைத் தீர்த்து வைக்கும்போது நீதிமன்றமானது இக்கட்டளைச் சட்டத்தின் வேறெங்காயினும் வேறு வகையாகப் பணிக்கப்பட்டால் ஒழிய இரண்டில் ஒரு திறத்தவருக்கு அத்தகைய விண்ணப்பத்தின் அல்லது வழக்கின் செலவுகளைக் கொடுக்கலாம் அல்லது வழக்கு நடவடிக்கைகளின், ஏதேனும் எதிர் காலக்கட்டத்திற்கு அத்தகைய செலவுத் தொகை களை தீர்மானிப்பதனை ஒதுக்கி வைக்கலாம். நீதிமன்றமானது அதன் கட்டளையில் அத்தகைய விண்ணப்பத்தின் அல்லது வழக்கின் செலவுத் தொகைகளின் தொகையை நிர்ணயிக்கலாம். ஆகவே, எவ்வாறாயினும் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை 214 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அந்த வகுதியைச் சார்ந்த விண்ணப்பமொன்றில் அல்லது வழக்கொன்றில் கொடுக்கப்படக்கூடிய செலவுத் தொகைகளின் தொகையின் ஐம்பது வீதத்திற்குக் குறைவாகவும் 214 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வீதங்களை அந்த வகுதியைச் சார்ந்த விண்ணப்ப மொன்றில் அல்லது வழக்கொன்றில் கொடுக்கப்படக்கூடிய செலவு த்தொகைகளின் தொகையினை இருநூறு வீதத்திற்கு மேற்படவும் இருத்தல்

ஆகாது. செலவுத் தொகைகளை மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கான ஏதேனும் கட்டளை தவணைப் பணங்கள் மூலம் கொடுப்பனவு செய்தல் பற்றிய 194 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்ட பணத்திற்கான தீர்வை ஒன்றாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 210 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 210 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது.

"*செலவுத் தொகைகள் எவரால் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நீதிமன்றம் பணித்தல் வேண்டும். அத்துடன் குறித்த சில விடயங்களில் பெறுமதியை மதித்தலும் வேண்டும்.*

210. தீர்வை அல்லது கட்டளையானது எவரால் ஒவ்வொரு திறத்தவரினதும் செலவுத் தொகைகள் செலுத்தப்பட வேண்டுமெனவும் முழுமையாகவோ அல்லது எப்பாகமாகவோ அல்லது விகித சமமாகவோ செலுத்தப்படுதல் வேண்டுமெனவும் பணித்தல் வேண்டும். நீதிமன்றமானது விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வகுப்புக்களைச் சார்ந்த வழக்கில் பதியப்பட்ட தீர்வைகளில் வழக்கின் பெறுமதி பற்றிய அதன் மதிப்பீட்டைக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய மதிப்பீடானது அவ்வழக்கிற்கு 214 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட வீதங்களை ஏற்புடைத்தாக்கும் நோக்கங் களுக்காக வழக்கின் பெறுமதியாகக் கருதப்படு தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 211 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 211 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (2) ஒராம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத் திற்குள்ள தத்துவங்களின் பொதுத் தன்மைக் குப் பங்கமில்லாமல் நீதிமன்றமானது ஏதே னும் விழலான அல்லது அலைக்கழிப்பதான வழக்கின் விடயத்தில் அல்லது மறுதிறத்தவ

ரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அல்லது எதிர்ப்பாகத்தின் விடயத்தில் அல்லது மற்ற திறத்தவரின் தாமதத்தினால் அல்லது தவணை தவறுகையினால் அல்லது ஏனைய திறத்தவரினால் செய்யப்பட்ட ஏதேனும் அவசியமற்ற அல்லது நியாயமற்ற விண்ணப்பத்தினால் அத்தகைய திறத்தவருக்கு செலவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அத்திறத்தவருக்கு செலவுத்தொகைகளைக் கொடுக்கலாம். ஆகவே எவ்வாறாயினும் அவ்வாறு கட்டளையிடப்பட்ட செலவுத் தொகைகள் எச்சந்தர்ப்பத்திலும் 214 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக் கப்பட்ட வீதங்களில் அவ்வகுதியைச் சார்ந்த விண்ணப்பத்தில் அல்லது வழக்கில் கட்டளையிடப்படக்கூடிய செலவுத் தொகை களின் ஐநூறு வீதத்தை எவ்விடயத்திலும் விஞ்சுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 213 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 213 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது.

"செலவுத் தொகைகள் மீது நீதிமன்றம் வட்டி கொடுக்கலாம்.

213. நீதிமன்றமானது தீர்வைத் திகதியிலிருந்து கணக்கிடப்படும் கட்டளைச் சட்டத்தின் 192 ஆம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறான வருடாந்த சட்டவீதத்தில் செலவுத்தொகைகள் மீது வட்டி கொடுக்கலாம் என்பதுடன் செலவுத் தொகைகள் வட்டியுட னோ வட்டியில்லாமலோ வழக்கின் விடயப் பொருளில் இருந்து கொடுக்கப்படுதல் வேண்டும் என அல்லது அதன்மீது பொறுப் பாக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்க லாம்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 214 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 214 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது.—

"செலவுத் தொகைகள் தொகை கணிக்கப் படுதல் வேண்டும்..

214. திறத்தவருக்கும் திறத்தவர்களுக்கு மிடையேயாயினுஞ்சரி அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவக்காரருக்கும் வாடிக்கையாளருக்குமிடையேயாயினுஞ் சரி செலவுத் தொகைப் பட்டியல்கள் யாவும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களுக்கிணங்க இரண்டில் ஏதேனுமொரு விடயத்தில் நீதிமன்றப் பதிவாளரினால் தொகை கணிக்கப்படுதல் வேண்டும். இரண்டிலொரு திறத்தவர் இந்தத் தொகைக் கணிப்புத் தொடர்பாக திருப்தியுறாவிட்டால் பிணக்கிலுள்ள இவ்விடயமானது அதன் முடிவுக்கென நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப் படுதல் வேண்டும். அத்துடன் நீதமன்றத்தின் முடிவானது (மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவாக இருந்தால் தவிர) மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப் படுவதற்கு உட்படுதலும் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 417 அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 417 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 417அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்.

"செலவுத் தொகைகள் கொடுப்பனவுக்கான பொறுப்புத் தொகை.

417அ. பிரிவு 416 இன் கீழ் அல்லது 417 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் நிர்ணயிக்கப்பட்ட செலவுத் தொகைகளைக் கொடுப்பதற்கான பிணைப் பொறுப்பு எச் சந்தர்பத்திலும் பின்வருவனவற்றின் கூட்டு மொத்தத்தை விஞ்சுதலாகாது.—

(அ) பிரிவு 214 இன் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட வீதங்களில் அந்த வகுதியைச் சார்ந்த வழக்கில் கட்டளையிடப்படக்கூடிய மொத்தச் செலவுத் தொகைகள் அத்துடன்,

(ஆ) வெளிநாட்டில் வசிக்கும் சாட்சிகளின் வருகைக்காகவும் சான்றையும் பெற்றுக்கொள்வதில் உறப்படக் கூடிய செலவுகள் போன்ற இடைநேர் விளைவான செலவுகளைச் சமாளிப்பதற்கு ஐந்து இலட்சம் ரூபா.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 705அ, 705ஆ எனும் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 705அ, 705ஆ எனும் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 756ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 756 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) மேன்முறையீடு செய்யும் திறத்தவர் ஒருவரால் வைப்பிலிடவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்பானது மேன்முறையீட்டுச் செலவை மேவுவதற்குப் போதியதான பணத்தொகையின் வைப்பொன்றாக அல்லது அசைவற்ற ஆதனத்தின் அடைமானமாகச் செய்யப்படலாம். அதிலும் கூடிய தொகையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆயின் பணமானது பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்பட்டவிடத்து அதனைக் கொடுப்பதற்கு மேன்முறையீட்டாளர் தீர்வையிடப்பட்ட அத்தகைய மேன்முறையீட்டின் வழக்குத் தொடர்ச்சியில் உறப்பட்டு தொகை கணிக்கப்படவேண்டிய எல்லாச் செலவுகளின் கொடுப்பனவுக்காகவும் நீதிமன்றப் பதிவாளரின் சார்பில் அடைமானமாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 839 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் சேர்க்கப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 840 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 840 என்னும் புதிய பிரிவைச் சேர்த்தல்.

ஒழுங்கு விதிகள்

840. (1) எக்கருமங்களுக்கு ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது

அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அக்கருமங்கள் எல்லாவற்றிற்காகவும் அல்லது அவை தொடர்பிலும் அல்லது அக்கருமங்கள் எவற்றிற்காகவும் அல்லது அவை தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, இவ்வட்டவணையின் 129 ஆம் இலக்கப் படிவத்தை நீக்கஞ் செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத் திற்கான இரண்டாம் அட்டவணையை நீக்கஞ் செய்தல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.